செய்தி குறிப்பு எண்– 77 நாள்–14.8.2008

## பயிர் காப்பீட்டு திட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு நிவாரணம்

1999ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசு நிறுவனமான இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் (AIC) மூலம் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் (NAIS) அனைத்து மாவட்டங்களிலும் மத்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டு. மாநில அரசுடன் இணைந்து கீழ்க்கண்ட பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகிறது.

- நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம் போன்ற தானியப்பயிர்கள்.
- உளுந்து, பச்சைப் பயறு, துவரை போன்ற பயறுவகைகள்
- நிலக்கடலை, எள், சூரியகாந்தி போன்ற எண்ணெய்வித்து பயிர்கள்.
- கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு, மஞ்சள் வாழை, மரவள்ளி, வெங்காயம், மிளகாய் போன்ற வணிகப் பயிர்கள்.

இந்த அரசு பதவி ஏற்றவுடன் பயிர்கடன் பெற்ற விவசாயிகள் மட்டுமே பயனடைந்து வந்த இந்த திட்டத்தில், பயிர்க்கடன் பெறாத விவசாயிகளையும் சேர்த்து, அவர்கள் செலுத்தும் பிரிமியத் தொகையில் 50 சதத்தை மானியமாக வழங்கிட 2006–2007ஆம் ஆண்டில் ரூ.8 கோடியும், 2007–2008ஆம் ஆண்டில் ரூ.15 கோடியும், 2008–2009ஆம் ஆண்டில் ரூ.40 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பயனாக 2005ஆம் ஆண்டுக்கு 1 லட்சமாக இருந்த விவசாயிகளின் எண்ணிக்கை 2006ஆம் ஆண்டு 3 லட்சமாகவும், 2007ஆம் ஆண்டு 5.5 லட்சமாகவும் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் மீது விவசாயிகள் கொண்டுள்ள ஆர்வத்தை காட்டுகிறது.

2006–2007ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.7.88 கோடி வழங்கப்பட்டு 10,608 விவசாயிகள் பயன்பெற்றனர்.

2007–2008 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் 5.5 இலட்சம் விவசாயிகள் சேர்க்கப்பட்டதால், பிரிமியத் தொகை மானியமாக இவ்வரசு 11.14 கோடி வழங்கியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் உள்பட 19 மாவட்டங்களில் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.267.62 கோடி என இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.150.53 கோடியும், சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.57.73 கோடியும், நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.27.96 கோடியும் இழப்பீடாக வழங்கபட உள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள இழப்பீட்டுத் தொகையில் 50 சதம் மாநில அரசும், 50 சதம் மத்திய அரசும் ஏற்கின்றன. விவசாயிகளின் நலன் கருதி அவர்களின் பிரிமியத் தொகையில் 50 சதம் மானியமாக வழங்குவதுடன் மாநில அரசு செலுத்துவதுடன், அவர்களுக்கு ஏற்படும் இழப்பீட்டிலும் 50 சதம் மானியத்தை மாநில அரசே வழங்கி அதிக அளவிலான விவசாயிகளை இத்திட்டத்தின் மூலம் பயன்பெற ஊக்குவித்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவசாயிகளை பாதுகாத்து வரும் இந்த அரசு விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையை நேரடியாக விரைவில் வழங்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

சில அரசியல் கட்சிகள் விவசாயிகளை தூண்டி விட்டு அரசியல் லாபம் பெற முயற்சிப்பதற்கு செவிசாய்க்காமல் இருக்குமாறு கேட்டுக் கொள்வதோடு, விவசாய பெருமக்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்ற கழக அரசு விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையினை விரைவில் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்**
**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.